இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 14-04-2025

# கொத்தடிமை எடுத்த ‘கொள்கை’ முடிவு!

சில நாட்களாக நிதானம் இல்லாமல் இருந்தார் எடப்பாடி பழனிசாமி. அவரது நடவடிக்கைகள் மர்மமாக இருந்தன. அதை விட அவரது பேச்சுகளும், எதையோ மறைக்கச் செய்யும் செயல்களாகவும் இருந்தன. பா.ஜ.க. தலைமை தன்னை மிரட்டுவதை மறைக்கவே இப்படி எல்லாம் நாடகம் ஆடி இருக்கிறார் பழனிசாமி என்பதை உறுதி செய்து விட்டார் அமித்ஷா.

**பா.ஜ.க. எந்த இரைக்காக காத்திருந்ததோ அந்த இரையாக ஆகிவிட்டார் பழனிசாமி. அவருக்கு வேறு வழியில்லை. அவரது சிக்கல்களை அவரே நன்கு அறிவார். பொதுச் செயலாளர் நாற்காலியில் பழனிசாமி அமர வைக்கப்பட்டாலும், அவர் அனைவராலும் ஏற்கப்பட்ட பொதுச்செயலாளர் அல்ல. அவருக்கு எதிரான ஒரு கூட்டம் அவரைச் சுற்றிலுமே இருந்து கொண்டு இருக்கிறது. பழனிசாமியின் நாற்காலியில் உட்கார அவரைச் சுற்றி இருக்கும் நான்கைந்து பேரே திட்டமிட்டுக் காத்திருக்கிறார்கள். இதில் இரண்டு பேரை பா.ஜ.க. தலைமையே ஊக்கம் கொடுத்து வளர்த்தும் வருகிறது. இது பழனிசாமிக்கு இருக்கும் முதல் சிக்கல்.**

தொடக்கத்தில் இருந்தே சசிகலா, தினகரன், பன்னீர்செல்வம் ஆகிய அணிகளால் நிராகரிக்கப்பட்டவர் பழனிசாமி. முதலில் பழனிசாமியை முதலமைச்சர் ஆக்கியவரே சசிகலாதான். சசிகலா காலை நோக்கி ஊர்ந்து போய் தொட்டு வணங்கினார் பழனிசாமி. அவரே, ‘நீ எனக்கு பதவி வாங்கி கொடுத்தியா? நீ ஏன் அ.தி.மு.க.வுக்கு உரிமை கொண்டாடுற?’ என்று சசிகலாவை ஒருமையில் பொதுக் கூட்டத்தில் பேசினார் பழனிசாமி. கப்பம் கட்டுவதில் தேர்ந்தவர் என்பதால்தான் பழனிசாமிக்கு அந்தப் பதவியையே கொடுத்தார் சசிகலா. மோதல் ஏற்படுவது என்பது வேறு, ஆனால் சசிகலாவையே நீ யார் என்று கேட்கும் அளவுக்கு துரோகியாக மாறினார் பழனிசாமி.

தினகரனுக்காக வாக்குச் சேகரித்தவர்தான் பழனிசாமி. அதன் பிறகு தினகரனை உதாசீனப்படுத்தினார் பழனிசாமி. தன்னை வலிமைப் படுத்திக் கொள்வதற்காக பன்னீர்செல்வத்தை முதலில் சேர்த்துக் கொண்ட பழனிசாமி, அதன்பிறகு அவரையும் தூக்கி எறிந்தார். இவர்கள் அனைவரும், பா.ஜ.க. பக்கமாக இருந்து குடைச்சல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். **அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்று சசிகலாவும் சொல்கிறார். அ.தி.மு.க. என் வசம் இருக்கிறது என்று பன்னீர்செல்வமும் சொல்கிறார். இவை அனைத்தும் இரட்டை இலை சின்னத்துக்கு சிக்கல் ஏற்படுத்துகிறது. அ.தி.மு.க.வை தன் வசம் வைத்திருந்தாலும் இரட்டை இலை சின்னம் கிடைக்காது என்ற சிக்கல் பழனிசாமிக்கு ஏற்பட்டுள்ளது. இது இரண்டாவது சிக்கல் ஆகும்.**

**சசிகலா, தினகரன், பன்னீர்செல்வம் ஆகிய மூவரும் பா.ஜ.க.வின் கஸ்டடியில்தான் இருக்கிறார்கள். இவர்களை அ.தி.மு.க.வுக்குள் சேர்க்கச் சொல்லி பழனிசாமிக்கு நெருக்கடி கொடுக்கிறது பா.ஜ.க. தலைமை. ‘இவர்கள் கட்சிக்குள் வந்தால் தனது தலைமை கேள்விக் குறியாகும்’ என்று பயந்துபோயிருக்கிறார் பழனிசாமி. இது அவருக்கு ஏற்பட்டுள்ள மூன்றாவது சிக்கல்.**

பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்தால் அ.தி.மு.க.வுக்கு இருக்கும் வாக்குகள் கூட விழாது என்பதை அறியாதவர் அல்ல பழனிசாமி. நாடாளுமன்றத் தேர்தலின் போதே டெல்லி சென்று பிரதமர் மோடி அருகில் நின்று கூட்டணியை உறுதி செய்து வந்த பழனிசாமி, தேர்தல் நெருக்கத்தில் பா.ஜ.க.வை கழற்றி விட்டார். எனவே, பழனிசாமியை பா.ஜ.க. தலைமை நம்பத் தயாராக இல்லை. கடிவாளம் போட்டு கட்டிப் போடத் திட்டமிட்டு தனது வழக்கமான ரெய்டு பாணியைக் கையில் எடுத்தது பா.ஜ.க..

கடந்த ஜனவரி மாதம் ரெய்டு அஸ்திரத்தை பா.ஜ.க. எடுத்தது. பழனிசாமியின் உறவினர்களுக்குச் சொந்தமான 26 இடங்களில் ரெய்டு நடந்தது. ‘எடப்பாடிக்கு செக் உறவினர் வீட்டில் தொடரும் ஐ.டி. ரெய்டு’, ‘எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வீட்டில் ஐந்தாவது நாளாக வருமான வரித்துறை ரெய்டு’, ‘எடப்பாடி உறவினர் வீட்டில் இறங்கிய ஐ.டி. அதிகாரிகள்’, ‘எடப்பாடி உறவினர் வீட்டில் விடிய விடிய ரெய்டு’, ‘கூட்டணிக்கு குறி வைக்கப்படுகிறாரா எடப்பாடி?’, ‘வசமாக சிக்கிய எடப்பாடி பழனிசாமியின் உறவினர்’, ‘எடப்பாடி பழனிசாமியின் உறவினர் வீட்டில் சிக்கியது என்ன?’, ‘750 கோடி வரி ஏய்ப்பு செய்த எடப்பாடியின் உறவினர்’, ‘உறவினரின் வரி ஏய்ப்பு எடப்பாடிக்கு சிக்கல்’, என்று ஊடகங்கள் அனைத்தும் செய்தி வெளியிட்டன. ‘முதலுக்கே மோசம் வந்துவிட்டது’ பழனிசாமிக்கு. **இதுதான் அவரை பா.ஜ.க.வை நோக்கி பணிய வைத்துள்ளது.**

‘இந்த ரெய்டுகள் அனைத்தும் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பதற்கான பா.ஜ.க.வின் அழுத்தங்கள் ஆகும்’ என்று அனைத்து ஊடகங்களும் எழுதியது. ரெய்டு நடந்த காலக்கட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றம் நடந்து கொண்டிருந்தது. அப்போது சட்டமன்றத்துக்கு வராமல் வீட்டில் முடங்கிக் கிடந்தார் பழனிசாமி. இதில் இருந்து தப்புவதற்காகத்தான் பா.ஜ.க.வின் மடியில் தஞ்சம் அடைய வேண்டிய நெருக்கடி பழனிசாமிக்கு வந்தது. மிகப்பெரிய பிரச்சினை என்பது இதுதான்.

**தனது தலைமைக்கும் பிரச்சினை. தனது இருப்புக்கும் பிரச்சினை. இரட்டை இலைக்கும் பிரச்சினை. தனது குடும்பத்துக்கும் பிரச்சினை. தனது சொத்துக்கும் பிரச்சினை. பாவம் பழனிசாமி என்ன செய்வார். கொத்தடிமையாய் இருக்க, கோடிக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்களை அடமானம் வைத்துவிட்டார். அதனைத்தான் அறிவிக்க வந்தார் அமித்ஷா.**

**‘கூட்டணிக்கும் கொள்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லீங்க’ என்பது பழனிசாமியின் அரியவகை அரசியல் தத்துவம் ஆகும். அதற்கு அவரே சாட்சியாகவும் ஆகிவிட்டது. சொன்னது போல நடப்பதுதான் அவரது வழக்கம்.**

••

மாவட்டச் செயலாளர் வி.ஜெயபாலன் தலைமையில்

## தென்காசி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கூட்டம்!

### கணேஷ் குமார் ஆதித்தன் சிறப்புரை!

தென்காசி, ஏப்.14–

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழகத் தகவல் தொழில்நுட்ப அணி மாநில செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் காணொளி காட்சி வழியாக 234 தொகுதி பார்வையாளர்கள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகளுக்கு கழக இணைய செயலியை வாட்ஸ்ஆப்பில் தகவல் தொழில்நுட்ப அணியினரால் பின்தொடர செய்து கொடுப்பது சார்பாக வழங்கிய அறிவுரைகளின்படி

தென்காசி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கூட்டம் சுரண்டை கலைஞர் அறிவாலயத்தில் கழக மாவட்ட செயலாளர் வி.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன் சிறப்புரையாற்றினார்.

ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர் பொன் செல்வன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அழகுதமிழ் சங்கர், முன்னிலை வகித்தனர்.

இதில் கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் சிவன் பாண்டியன், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் செல்லத்துரை, பாப்பாக்குடி ஒன்றிய செயலாளர் மாரிவண்ண முத்து, கடையம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன், ஆழ்வார்குறிச்சி பேரூர் செயலாளர் அழகேசன், கீழப்பாவூர் பேரூர் செயலாளர் ஜெகதீசன், முக்கூடல் பேரூர் செயலாளர் ஆர்.எல்.லட்சுமணன், ஆலங்குளம் பேரூர் செயலாளர் நெல்சன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் சிங்கதுரை, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் மகேஷ் பாண்டியன், கீழப்பாவூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சீமான், பாப்பாக்குடி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் உச்சி மகாளி, ஐயப்பன், கடையம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சுரேஷ், ஆழ்வார்குறிச்சி பேரூர் மகளிர் ஒருங்கிணைப்பாளர் பரமகல்யாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!




தமிழ்நாட்டின் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக

## அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### ஏப். 16 அன்று – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!



சென்னை, ஏப்.14

தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு வருமாறு:–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 16.04. 2025 அன்று மாலை சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்காக அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் மற்றும் பதிவாளர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று அம்பேத்கர் பிறந்த நாள்: கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. தலைமையில்!

## சென்னை அண்ணா அறிவாலயத்தில் - அண்ணல் அம்பேத்கர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை- “சமத்துவ நாள்” உறுதிமொழி!

### சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!

*சென்னை, ஏப். 14 -*

*அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளினை முன்னிட்டு இன்று (ஏப்ரல் - 14) சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்து “சமத்துவ நாள்” உறுதிமொழி ஏற்கின்றனர்.*

*சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை வருமாறு:*

*”வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்” என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்து, அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் அன்றும் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, ”சமத்துவநாள் உறுதிமொழி” ஏற்றுக் கொண்டு வரப்படுகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தி “சமத்துவ நாள்” உறுதிமொழியை ஏற்று, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை ”சமத்துவ நாளாக” கொண்டாடிட வேண்டும்” என தலைமைக் கழகம் அறிவித்தத்தற்கிணங்க,*

*சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளினை முன்னிட்டு இன்று (ஏப்ரல் - 14) காலை 10.00 மணியளவில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. தலைமையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ., ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்து “சமத்துவ நாள்” உறுதிமொழி ஏற்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாநகர மன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.*

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமையில்

## மனிதநேயம் 53: எழும்பூர் தெற்கில் மாபெரும் புகழரங்கம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி – நடிகர்.ரவி மோகன், நடிகர் கருணாஸ், நடிகைகள் நளினி – சீதா சிறப்புரை!

*சென்னை, ஏப். 14 -*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 53, கதிரவனை போற்றும் நட்சத்திரங்கள்! கலையாய் மின்னும் சொற்சித்திரங்கள்!! எனும் தலைப்பில் எழும்பூர் தெற்கு பகுதி சார்பில் மாபெரும் புகழரங்கம் நாளை 15.04.2025, செவ்வாய்கிழமை, மாலை 6.00 மணியளவில், சென்னை, வேப்பேரி, ரித்தர்டன் ரோடு, பி.கே.என்.ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.*

*இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன் தலைமை வகிக்க, மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி, வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, ஸ்ரீராமுலு, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, முன்னிலை வகிக்கின்றனர்.*

*டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ப.தாயகம் கவி, ஜோசப்சாமுவேல், அ.வெற்றிஅழகன் மற்றும் தமிழன்பிரசன்னா, ப.ரங்கநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.எம்.யாழினி ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன் எம்.சி, ப.ஸ்ரீராமுலு எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி, சாவித்திரி ஸ்ரீவீரராகவன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி, பரிதி இளம்சுருதி எம்.சி, கே.அண்ணபூரணி, கே.வள்ளி, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ்.விஜயலஷ்மி, கே.எம்.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, எஸ்.ஜான்சிராணி, சகினாபேகம், சூர்யா ரகு, ஜி.ஜெயசூர்யா, அமுல் பாண்டியன், யு.இலக்கியா, எம்.எழில், எஸ்.விஜயலஷ்மி முன்னிலை வகிக்கின்றனர்.*

*இப்புகழரங்கத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நடிகர்.ரவி மோகன், நடிகர். கருணாஸ், நடிகை.நளினி, நடிகை.சீதா ஆகியோர் புகழுரைக்கின்றனர்.*

*மேலும், இப்புகழரங்கத்தில் பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், சங்கரிநாராயணன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, தேவஜ வஹர், ஜி.மகாதேவன், இசட்.ஆசாத், கூ.பி.ஜெயின், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், செ.தமிழ் வேந்தன், எம்.சாமிகண்ணு, வே.வாசு, வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ். புரசை கோ.மணி, க.நந்தீஸ்வரன், எஸ்.பன்னீர் செல்வம், த.வ.செம்மொழி, பி.ஜெ. துளசிங்கம், பி.உதயசங்கர், வி.ரமேஷ், எம்.இப்ராஹிம்கனி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி. எம்.தாவூத்பீ, கே.சாரதா, லதா வாசு, எல்.ரமணி, எஸ்.தமிழ்செல்வி, டி.யோகபிரியா, பி.அமுதா, எஸ்.உமா, சி.ஸ்ரீதேவி, என்.உஷாநாகராஜ், கே.பொற்கொடி, மு.சரவணன், எம்.கமல், எம்.இ.சேகர், பி.பரிமளம், ராஜேஸ்ஜெயின், ரமேஷ்(எ) நீலகண்டன், டி.லோகேஷ், ஜெ.பால முருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, வானவில் விஜய், புரசை ஜி.தாமோதரன், நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா.பிரதீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், வட்ட கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.*

*இப்புகழரங்கத்தில் வி.விஜயகுமார், ஆர்.பாபு நன்றி கூறுகிறார்கள்.*



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்தில் கோடை வெப்பத்தை தணிக்கும் பொருட்டு, ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தலை மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பழரசம், மோர், பழ வகைகள், இளநீர், வெள்ளரிக்காய் போன்றவற்றை வழங்கினார். உடன் தொகுதி மேலிடப் பார்வையாளர் சூர்யா வெற்றிகொண்டான், ஒன்றிய நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொண்டனர்.